2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரி கேட்டார்கள்; இப்போது மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்யக் கேட்கிறார்கள்; மக்காச்சோளத்தைக் கொள்முதல் செய்வதற்கு நாங்கள் அனுமதியளித்து, இப்போது அதைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தனியார் அதிகமாக கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***38109—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் தற்பொழுது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை.

[2023 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட வேலூர் மாநகரில், வேலூர் புறநகர்ப் பகுதியான அரியூர், பாகாயம், சித்தேரி, பழவஞ்சாத்து, விருபாட்சிபுரம் பகுதிகளில், சற்றேறக்குறைய 40 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றார்கள். ஏற்கெனவே, ஊராட்சிப் பகுதிகளாக இருந்தவை, தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள மக்களின் நீண்டகால கோரிக்கை அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்டுவது ஆகும். எனவே, வேகமாக வளர்ந்துவரும் மாநகராட்சிப் பகுதிகளில், அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வேலூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள பகுதியான பெண்ணாத்தூர் பேரூராட்சியில், சற்றேறக்குறைய 20 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே அரசு இடம் இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவளித்தால், கண்டிப்பாக பெண்ணாத்தூர் பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தை நாங்கள் ஏற்பாடு செய்து தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பகுதியில், அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நீங்கள் நிலம் கொடுப்பீர்கள் போலிருக்கிறதே? உங்களது சொந்த நிலத்தைக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வேலூர் மாவட்டத்திலே, மனைப் பிரிவுகள் ஏறத்தாழ 8 ஆயிரத்து 545 போடப்பட்டிருக்கின்றன. அதிலே, பல இன்னும் விற்காமல் இருக்கின்றன. தனி வீடாக 50 வீடுகள் அணைக்கட்டுக்கும், வேலூருக்கும் இடையிலே கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே, 11 வீடுகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தே விற்காமல் இருக்கின்றன. இருந்தாலும்கூட, எங்கே அவசியம் இருக்கிறதோ, அதை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தேடித் தருவதற்கான நடவடிக்கையை

2023 ஏப்ரல் 19]

எடுப்பதாகச் சொன்னார்கள். வீட்டுவசதி வாரியத்திலேதான் இடமில்லையே தவிர, அரசாங்கத்தினுடைய இடம் இருந்தால் அதைப் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டை நாம் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட சென்னை–கிருஷ்ணகிரி–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கக்கூடிய பள்ளிகொண்டா பேரூராட்சி சற்றேறக்குறைய 25 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட பேரூராட்சியாகும். அந்த மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் அங்கே அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒடுகத்தூர் பேரூராட்சியானது சற்றேறக்குறைய 15 ஆயிரம் மக்கள்தொகையைக் கொண்ட ஒரு பேரூராட்சியாகும். வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 4 பேரூராட்சிகளில், 3 பேரூராட்சிகள் அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய பேரூராட்சிகளாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஒடுகத்தூர் பகுதியிலே சற்றேறக்குறைய ஐந்தரை ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சியில் கண்டிப்பாக அந்த இடத்திலே அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருந்தால் கண்டிப்பாகச் செய்யலாம். இரண்டே இரண்டு விஷயங்கள். ஒன்று அங்கு இடம் வேண்டும். அடுத்தது, அங்கே தேவைகள் இருக்கின்றதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால், வீடுகள் கட்டி விற்காமலேயே பல இடங்களில் இருக்கிற காரணத்தால்தான், இதைப் பற்றி முன்னெச்சரிக்கையாக நாம் நடவடிக்கை எடுக்க*

வேண்டுமென்று கருதுகிறோம். இதிலே இப்போது வேறு மாதிரியான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. Land Pooling என்ற வகையிலே நில சேர்மானம் என்ற ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அதற்கான Bill கூட வருகிறது. எனவே, ஏதோ ஒரு வகையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு சென்னை போன்ற இடங்களிலெல்லாம் சரியான இடம் கிடைக்காத ஒரு நிலை உள்ளது. கோயம்புத்தூராக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும் இதே நிலைதான் உள்ளது. ஆனால், மும்பை, டெல்லி போன்ற இடங்களிலெல்லாம் இருக்கின்ற இடத்திலேயே 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் எனக் கட்டி, அதிகளவு வீடுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். நிலமில்லாத நிலையில், இப்படிப்பட்ட நெருக்கடியான நகரங்களிலே 20 மாடிகள் அல்லது 30 மாடிகள் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி மக்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒரு சரியான நடவடிக்கைதான். ஆனால் நமக்கு நடைமுறையிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், ஏற்கெனவே கட்டிய வீடுகளில் இன்னும் 8 ஆயிரம் வீடுகள் விற்காமல் இருக்கின்றன. அதன் காரணமாக, எங்கு அவசியம் என்பதை மிகத் தெளிவாக ஆய்வு செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். அவர்கள் சொல்வது நியாயமானது. எனவே, கோவை போன்ற மாநகரப் பகுதிகளில், அதற்கான ஆலோசனையைச் செய்யலாம்; நடவடிக்கை எடுக்கலாம்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேரூராட்சிப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து அவ்வளவு தூரம் போய் விட்டார்கள். தனியாகக் கேள்வி கேட்க வேண்டும் என்பதில்லை. இருந்தாலும் அதைப் பற்றி நீங்கள் தற்போது கேட்டிருப்பதை வைத்தே ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்திலே அய்யந்திருமாளிகைப் பகுதியிலே வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் உள்ளன. இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்தக் குடியிருப்புகள் * பழுதடைந்த நிலையிலே இருக்கிற ஒரு சூழ்நிலையிலே, இந்தக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, புதியதாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் இரண்டு விதமாக இருக்கின்றன. ஒன்று வாடகைக்கு விடப்பட்டிருக்கிற குடியிருப்புகள்.*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

அவை வாரியத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். மற்றொன்று, ஏற்கெனவே அவை 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் விற்கப்பட்டவை. அவையும் பழுதடைந்து, தற்போது அவர்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டையும் உடனடியாகச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சேலமும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் பேசும்போது, ** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தைக்குப் பதிலாக பழுதடைந்த என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

185—

கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம்

***15351—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைப்பதற்குத் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.